# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2252/30 - 2021 නොවැම්බර් මස 03 වැනි බදාදා - 2021.11.03

*2252/30 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டம்**

1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) சட்டத்தின் உப பிரிவு 4 (1) பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 20 ஆம் பிரிவினால் எனக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகிய நான், பின்வரும் ஒழுங்குவிதிகளை அறிவிக்கிறேன்.

**பசில் ராஜபக்ஷ,**
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2021, நவெம்பர் 03.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் **"2021 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்"** என எடுத்துக்காட்டப்பட முடியும்.

2. இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் 2021, நவெம்பர் 03 அல்லது அதற்குப் பின்னர் கப்பல் ஏற்றுமதி ஒப்பந்த சீட்டு/ விமான வழி ரசீது திகதியைக் கொண்ட பொருட்களை இறக்குமதி செய்வதற்கு மட்டுமே பொருந்தும்.

3. 2021, யூன் 11 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட 2231/ 18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் விவரிக்கப்பட்டுள்ள பின்வரும் பொருட்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய உள்ளீடுகள் அட்டவணை I இல் இருந்து நீக்கப்படல் வேண்டும்.


1A - PG 5596 — 460 (2021/11)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| | நிரல் I<br>இ.மு<br>தலைப்பு | நிரல் II<br>இ.மு<br>குறியீடு | | நிரல் III<br>விபரம் | நிரல் IV<br>தற்காலிக<br>இடைநிறுத்தம்<br>**(TS)** |
|---|---|---|---|---|---|
| **18** | **10.06** | | | **அரிசி** | |
| | | 1006.30.00 | - | பாதியாக அரைக்கப்பட்ட அல்லது முழுமையாக அரைக்கப்பட்ட அரிசி, மெருகூட்டப்பட்டவை அல்லது மெருகூட்டப்படாதவை, பளபளப்பாக்கப்பட்டவை அல்லது பளபளப்பாக்கப்படாதவை: | |
| | | 1006.30.10 | --- | பச்சை அரிசி (கெகுலு) | TS |
| | | 1006.30.20 | --- | நாட்டரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) | TS |
| | | 1006.30.30 | --- | சம்பா அரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) | TS |
| | | | | | |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.